# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

**வழக்கு எண் 8319/விசாரணை/2009**

**கோவையில் விசாரணை நடைபெற்ற நாள் 18-9-2009**

| | |
|---|---|
| முன்னிலை: | திரு ஜி. இராமகிருஷ்ணன, இ.ஆ.ப.(ஓ.)<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர்: | திரு கே. வேலுச்சாமி, த/பெ திரு கிருஷ்ணசாமி கவுண்டர், 3/272 இந்திரா நகர், தாராபுரம் ரோடு, தூங்கவி அஞ்சல், உடுமலைப்பேட்டை வட்டம். |
| பொது அதிகார அமைப்பு: | **1.** பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம்,கச்சேரி வீதி, உடுமலைப்பேட்டை.<br>2. பொதுத் தகவல் அலுவலர், சார் ஆட்சியர் அலுவலகம், பொள்ளாச்சி. |

*****

இவ்வழக்கின் இன்றைய (18-9-2009) விசாரணைக்கு மனுதாரரும் பொது அதிகார அமைப்பின் சார்பாக இரு பொதுத் தகவல் அலுவலர்களும் வந்திருந்தனர்.

மனுதாரர் தனது 6-4-2009 தேதியிட்ட மேல் முறையீட்டு மனுவில் தான் கேட்ட தகவல்கள் இதுவரையில் வழங்கப்படவில்லை என்று ஆணையத்திற்கு முறையிட்டுள்ளார். 17-12-2008 தேதியிட்ட தனது மனுவில் மனுதாரர் தனது வீட்டில் ஏற்பட்ட ஒரு நிகழ்வு குறித்து தகவல் கேட்டு சார் ஆட்சியர் அலுவலகத்திற்கு மனு அனுப்பியுள்ளார். அதற்கு முன்னர், பொதுத் தகவல் அலுவலர் என்று விலாசமிட்டு 6-10-2008 அன்று உடுமலைப்பேட்டை வட்டாட்சியர் அலுவலகத்திற்கும் 26-8-2008 அன்று வட்டாட்சியருக்கும், 4-3-2009 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கும் மனுக்கள் அனுப்பியுள்ளார். அதேபோன்று பல்வேறு நடவடிக்கைகள் எடுப்பது குறித்து கேட்ட தகவல்கள் ஏதும் வந்து சேராத நிலையில் இவ்வாணையத்திலிருந்து சம்மன்கள் வந்தவுடன் அவசர கதியாக நேற்று (17-9-2009) மாலை மனுதாரர் கேட்ட தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறு கால தாமதமாகத் தகவல் வழங்கிய பொள்ளாச்சி சார் ஆட்சியர்

அலுவலகம் மற்றும் உடுமலைப்பேட்டை வட்டாட்சியர் அலுவலகம் ஆகியவற்றின் பொதுத் தகவல் அலுவலர்கள் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் தண்ட நடவடிக்கைக்கு உரியவர்கள் ஆகின்றனர். எனவே, இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் அதிக பட்ச அபராதத் தொகையாக தலா **25,000/** ஏன் வசூல் செய்து அரசுக் கணக்கில் வரவு வைக்கக்கூடாது என்பதற்கான விளக்கங்களைப் பணிந்தளிக்குமாறு சம்பந்தப்பட்ட இரு பொதுத் தகவல் அலுவலர்களும் பணிக்கப்படுகின்றனர். இத்தனை காலமாக மனுதாரரை அலைக்கழிப்பு செய்ததன் காரணமாக மனுதாரருக்கு நேர்ந்துள்ள இழப்பை ஈடு செய்யுமுகத்தான் மேற்படி பொது அதிகார அமைப்புகளிலிருந்து இழப்பீட்டுத் தொகை ரூ.10,000/ ஏன் வசூலித்து மனுதாரருக்கு வழங்கக்கூடாது என்பதற்கான காரணத்தையும் இவ்வாணை பெறப்பட்ட 15 தினங்களுக்குள்ள இவ்வாணையத்திற்கு அனுப்புமாறு மேற்கண்ட இரு பொதுத் தகவல் அலுவலர்கட்கும் ஆணையிடப்படுகிறது.

**மாநில தகவல் ஆணையம்**

**ஒப்புதல் அளிக்கப்பட்ட நாள் 8.10.09**
**ஆணையத்தின் ஆணைப்படி** **உதவிப் பதிவாளர்**

<u>வழக்கு எண் 8319/விசாரணை/2009</u>
பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
கச்சேரி வீதி,
உடுமலைப்பேட்டை.

<u>வழக்கு எண் 8319/விசாரணை/2009</u>
பொதுத் தகவல் அலுவலர்,
சார் ஆட்சியர் அலுவலகம்,
பொள்ளாச்சி.

<u>வழக்கு எண் 8319/விசாரணை/2009</u>
மாவட்ட ஆட்சியர்,
கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கோயமுத்தூர் - 641 018.

<u>வழக்கு எண் 8319/விசாரணை/2009</u>
திரு கே. வேலுச்சாமி,

த/பெ திரு கிருஷ்ணசாமி கவுண்டர்,
3/272 இந்திரா நகர், தாராபுரம் ரோடு,
தூங்கவி அஞ்சல்,
உடுமலைப்பேட்டை வட்டம்.